நகல்:

சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை

அரசு ஆணை (நிலை) எண் 183 நாள் 20 ஆகஸ்டு 1984

பார்வை:

1. அரசு ஆணை நிலை எண் 471, நிதித் துறை நாள் 21.5.77.
2. அரசு ஆணை நிலை எண் 1855, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை நாள் 14.12.83.

---

ஆணை:

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் அரசு அலுவலகங்களிலுள்ள எந்த ஒரு பணியிடமும் ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக இருந்தால் அந்தப் பணியிடம் தலைமைச் செயலகத்திலுள்ள நிதித் துறையின் ஒப்புதலுடன் கூட சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையின் ஆணை பெறப்படாமல் நிரப்பப் படக்கூடாது என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வுத்திரவு நகராட்சி நிர்வாகத்திலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக நகராட்சி மற்றும் நகரியங்களில் ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆணைகள் பிறப்பிக்க வேண்டியுள்ளது.

2. ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பும் அதிகாரத்தை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு அளிக்கலாம் என்று நியமன அளவுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

3. இதுபோன்று பேரூராட்சிகளுக்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நியமன அளவுக் குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரையை அரசு ஏற்று பார்வை 2ல் கண்ட அரசாணையில், ஆறு மாதங்களுக்கு மேலாக காலியுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரத்தை, ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு வழங்கியுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில், பத்தி 2ல் கண்டுள்ள நியமன அளவுக் குழுவின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்து, நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் நியமன அளவுப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள பணியிடங்கள் ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக இருந்தால் அப்பணியிடங்களை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரே நிரப்பலாம் என ஆணையிடுகிறது.

இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலுடன் (அ.சா.கு.37785/ ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை நாள் 25.7.84) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

ஜெ.ஆர். இராமநாதன்,
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை–5.

/உண்மை நகல்/

(M. Ponraj Selvakumar)
Superintendent,
Directorate of Municipal
Administration, Chennai-5

Scanned by CamScanner